## “கல்லாப்பெட்டிக் கூட்டணி” என்று வர்ணிக்கப்பட்டக் கட்சிகளை அழைத்து

# மக்களின் செல்வாக்கைப் பெற்று விடலாம் என்று கனவுக் காணாதீர்கள் முதல்வரே!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கடும் தாக்கு!



நெல்லை,செப்.13-

“கல்லாப்பெட்டி கூட்டணி” என்று வர்ணிக்கப்பட்ட கட்சிகளை அழைத்து “மதச் சார்பற்ற சமூகநீதி வெற்றி கூட்டணி” என்ற பெயர் மாற்றம் செய்தாலேயே மக்களின் செல்வாக்கை பெற்று விடலாம் என்று கனவு காணாதீர்கள் CMsir? என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

அதில் அவர் கூறி யிருப்பதாவது.

த.வெ.க.ஆட்சி அமைந்த 100 நாட்களுக்குள் மக்களின் கோபம், இளைஞர்களின் அதிருப்தி, பெண்களின் சாபம், விவசாயிகளின் கண்ணீர், அரசு ஊழியர்களின் ஆவேசம் ஆகியவற்றால் செல்வாக்கு சரிந்து வருவதை உணர்ந்து இடைத்தேர்தலில் பழைய பருப்பு வேகாது என்பதற்காக உங்களால் “கல்லாப்பெட்டி கூட்டணி” என்று வர்ணிக்கப்பட்ட கட்சிகளை அழைத்து “மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி” என்று பெயர் மாற்றம் செய்தாலேயே மக்களின் செல்வாக்கை பெற்று விடலாம் என்று கனவு காணாதீர்கள் CMsir?

நேற்று தங்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் முடிந்த பின்பு கூட்டத்தின் நோக்கம் குறித்தோ,பிரதமர் வேட்பாளர் குறித்தோ, இடைத்தேர்தலில் போட்டியிடுது குறித்தோ பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேச துணிவில்லாமல்,கூட்டணி கட்சி தலைவர்கள் தங்கள் விருப்பப்படி கருத்துச் சொல்லி கொள்ளுங்கள் என்று அவர்களை அவமதித்திப்பது,உங்கள் “நரித்தனத்தின் வெளிப்பாடு” என்பது நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும் CMsir ?

இந்தியாவில் அரசியல் அமைப்பு சட்டம், பத்திரிக்கை சுதந்திரம்,கருத்து சுதந்திரம், மக்களின் உரிமைகளுக்கு எதிரான அன்னை இந்திரா அவர்களால் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலையை அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் எதிர்த்து குரல் கொடுத்ததால் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் சித்திரவதை அனுபவித்த தியாக வரலாற்றை சட்டமன்றத்தில் கேலி செய்து கூத்தடிக்கும்,பண்பில்லா, அறிவில்லா, நாகரிகமில்லா கூத்தாடிக்கு முதல்வர் பதவி ஒரு கேடா?

ஒருமுறை ஆந்திர முன்னாள் முதல்வர் மறைந்த என்.டி.ராமராவ் அவர்கள் வெளிநாடு பயணம் சென்று திரும்புவதற்குள் சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆட்சியை கவிழ்த்து முதல்வரானது போல் ஆதவ்அர்ஜுனா முதல்வராகிவிடக்கூடாது என்ற பயத்தில் உங்களோடு லண்டன் அழைத்து செல்கிறீர்களா CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 118-வது பிறந்த நாள்: மதுரை மாநகர் மாவட்டக் கழகம் சார்பில்

# பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி வேண்டுகோள்!



மதுரை, செப். 13-

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118-வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்படுகிறது. எனவே மதுரை மாநகர் மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடமை கண்ணியம் கட்டுப்பாடு !!! என்ற தாரக மந்திரத்துக்கு சொந்தக்காரர்,

“பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு” மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அவர்கள் தலைமையில் 15.09.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் நெல்பேட்டையில் உள்ள “பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு” மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் , மாமன்ற உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் தலைமை தாங்கி கண்டன கோஷங்களை முழங்கினார்!

குமரி, செப். 13-

தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” (12.09.2026, சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் நாகர்கோவில், அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ. மகேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரையும், பொருளாதார மேதை முரசொலி மாறன் அவர்களையும், 23 வயதில் MISA அவசரநிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்து தியாகத்தைச் செய்த கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் பேசிய பேச்சை கண்டித்து மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கண்டன கோஷங்களை முழங்கினார். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ். ஆஸ்டின் கண்டன உரையாற்றி ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம், மாநில தணிக்கைக்குழு உறுப்பினர் என்.சுரேஷ்ராஜன், மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், மாநில அயலக அணி துணை செயலாளர் எ.பாபு வினிபிரட், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை தலைவர் வி.ஜோசப் ராஜ், மாநில வர்த்தகர் அணி இணை செயலாளர் என். தாமரைபாரதி, மாநில அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் எம்.சிவராஜ், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரெத்தினம், பொருளாளர் ஐ.கேட்சன், துணை செயலாளர் ஏ. ஆர்.பூதலிங்கம்பிள்ளை, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ரா.பார்த்தசாரதி, ஆர். சதாசிவன், நாகர்கோவில் மாநகராட்சி பொறுப்பு மேயர் ம.மேரி பிரின்சிலதா, நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், வடக்கு மண்டலத் தலைவர் பகுதி செயலாளர் இ.ஜவகர் உட்பட கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தலைமைக் கழக சொற்பொழிவாளர்

# எழும்பூர் எம்.இ.தேவநிதி இல்ல மணவிழா!

## திண்டுக்கல்லில் இன்று நடைபெறுகிறது!



சென்னை, செப்.13-

தலைமைக் கழக சொற்பொழிவாளர் எழும்பூர் எம்.இ.தேவநிதி - டி.சந்தான லஷ்மி ஆகியோரின் புதல்வி டி.ரசிகாவிற்கும், கலைமகள் 4கே போட்டோ & வீடியோ எஸ்.டி.ரவிச்சந்திரன் - ஆர்.மஞ்சுளா ஆகியோரின் புதல்வர் ஆர்.ராஜராஜனுக்கும் மணவிழா இன்று (13.9.2026 - ஞாயிறு) காலை 8.30 மணியளவில் திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ. மஹாலில் நடைபெறுகிறது.

**சென்னையில் மணவிழா வரவேற்பு!**

இம்மணவிழா வரவேற்பு 20.9.2026 - ஞாயிற்றுக்கிழமை 6.30 மணியளவில் புரசைவாக்கம், டவுட்டன், ரித்தர்டன் ரோடு, ஒய்.எம்.சி.ஏ. ஆடிட்டோரியம் சென்னையில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமை வகிக்கிறார்.

தயாநிதி மாறன் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.,மா.சுப்பிரமணியம், நே.சிற்றரசு, ஆர்.டி.சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, திருச்சி என்.சிவா, ஐ.பெரியசாமி, ஆர்.எஸ். பாரதி, ஆ.ராசா, அன்பகம் கலை, ஆர்.கிரிராஜன், ஐ.பி.செந்தில் குமார், கோவி. செழியன், டி.கே.எஸ். இளங்கோவன், தயாகம் கவி, பெரியகருப்பன், ஆவடி சா.மு.நாசர், பூச்சி முருகன், அ.வெற்றி அழகன், கே.எஸ்.இரவிச்சந்திரன், ஆலூர் சானவாஸ், சுப.வீரபாண்டியன், வீ. அன்புராஜ், அ.அருள்மொழி, பிரின்ஸ் பெரியார், சே.மெ.மதிவதனி, தமிழன் பிரசன்னா, ஆர். பத்பநாபன், நா.எழிலன், கே.எஸ்.எம்.நாதன், எம். விஜயகுமார், இறையன்பன் குத்தூஸ், மருது அழகுராஜ், பொன்.தனபால், ஈரோடு இறைவன், கோ.மணி, எஸ்.மணிமுடி, கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், ஆ.நிர்மலா தேவி, ஜி.தாமோதரன், சைதை சாதிக். ஐ.சி.எப். வ.முரளிதரன், இரா.கலைவேந்தன், செ. தமிழ்வேந்தன், வி.சுதாகர், ஜெ.கிருஷ்ணமூர்த்தி, வி.விஜயகுமார், வி.நாகராஜ், எழும்பூர் கோபி, சேப்பாக்கம் பிரபாகர், வே.உதயசூரியன், ஆலந்தூர் ஒப்பிலாமணி, பூங்காநகர், கண்ணன், எட்டையபுரம் தமிழ்பிரியன், வே.பா.ரோஷன், வே.பா. ரோஷித்,

மா.பா.அன்புதுரை, ந.ராமலிங்கம், ச.பரமசிவம், எஸ்.மதன்மோகன், எம்.சாமிசண்ணு, சொ. வேலு, எம்.ஆர்.டி.அப்துல் ரஹ்மான், வே.உமாகாந்த்,

சு.மனோகரன், எல்.சுந்தர்ராஜன், டால்பின் எஸ். அரிகிருஷ்ணன், எஸ். சுரேஷ், பி.சிவக்குமார், எஸ்.அன்புசெல்வன்,

வே.முருகன், ஆ.நத்தியராஜ், து.களரிமுத்து, மா. காந்தி, ஐ.சி.எப். கலையரசன், டி.வி.வேலு, ப.ராணி, மு.கிருஷ்ணன், வி. மோகன், கோ.வடிவேலு, க.நந்தீஸ்வரன், கி.புஷ்பராஜ், ஏ.கே.ரபீக், சூளை நேரு, எஸ்.குபேரன்,க.அன்பழகன், கே.அருள்தாஸ், ஏ.சாமுவேல், ஜெ. சிலம்பரசன், எல்.சுகுமாறன், பா.கருணாநிதி, டேவிட் எம்.கிருஷ்ணமூர்த்தி, த. பொற்செழியன், கே.கே. ஜெகதீசன், பா.நாராயணன், ஜெ.சரவணன், ஜெ.விநாயகம், தா.பாபு சேகர், ஜி.துளசிங்கம், ஆர்.சிராஜ், எம். ஜாவித், எஸ்.எபிநேசன், டி.அமுல்தேவி, எஸ்.கண்ணன், நேரு பிரபாகரன், ஏ.கவிதா, பி.சத்தியகலா, மகாலட்சுமி, ஆ.ஞானகுரு, பி.எஸ்.வைஷ்ணவி, ச.கோகோமகன், எம்.நடராஜன், டி.சந்திரசேகர், எஸ்.ஜெயகுமார், வி. கிருஷ்ணகுமார், ஆர்.உதயசங்கர், எஸ்.குப்புசாமி, டி. இளம்பரிதி, ராபர்ட் ஜான், ஒயிட்பீல்டு, முகைதீன், எம்.எம்.முகைதீன், மார்ட்டின், எம்.நாகராஜ், எஸ். அருண், எஸ்.தாரிக், புரசை கே.மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.


எழும்பூர் கோபிநாத் நன்றி கூறுகிறார்.



விருதுநகர் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை முன்பு தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ராஜ செல்வம் தலைமையில் மத்திய சங்க தலைவர் பார்த்திபன் முன்னிலையில் ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத போக்கைக் கண்டித்தும், தமிழக அரசின் தனியார் மயம், நிர்வாக சீர்கேட்டைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.வி.மாடசாமி, ராம்கோ சௌந்தரராஜ், இ.பி. அண்ணாதுரை, மத்திய சங்கப் பொருளாளர் திருவேட்டை போத்தி உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்!

# மக்களின் நெஞ்சில் தீட்டிய கலைஞரின் குறளோவியம்!




வள்ளுவர் மீதும் குறள் மீதும் கலைஞருக்கு அவ்வளவு ஆசை. அதன் வெளிப்பாடுதான் குமரி முனையில் உயர்ந்து நிற்கும் 133அடி உயர திருவள்ளுவர் சிலை. சென்னையில் அழகாக அமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம். அரசுப் பேருந்துகளில் திருக்குறளை எழுதச் செய்து எல்லாரிடமும் அதனைப் பரப்பியதில் கலைஞர் அரசின் பங்கு முக்கியமானது. திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கை தமிழ்நாடு அரசின் சார்பில் கடைப்பிடிக்கச் செய்யும் முறையைக் கொண்டு வந்தவரும் கலைஞர்தான்.

1330 குறள்களுக்கும் அவர் மிக எளிமையாக உரை எழுதியிருக்கிறார்.

மு. வரதராசனார் எழுதிய திருக்குறள் உரை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டது. அவரைப் போலவே எளிமையான உரை எழுதி மாணவர்களுக்கு மட்டுமின்றி பாமரர்களுக்கும் திருக்குறளை விளக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

திருக்குறளுக்கு உரை எழுதியதற்கு முன்பாக அவர், 354 குறள்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றுக்கு கதை வடிவிலும், நிகழ்வுகள் மூலமாகவும் கலைஞர் அளித்த விளக்கமே ‘குறளோவியம்’ எனும் சிறந்த படைப்பாகும்.

**உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய்; கடலைச்**
**செறாஅய் வாழிய நெஞ்சு.**

**குறள் - 1200**

இந்தத் திருக்குறளுக்கு என்ன அர்த்தம் என்பது எல்லாருக்கும் எளிதாகத் தெரிந்துவிடாது. கலைஞர் அதைக் கச்சிதமாக விளக்குகிறார்.

ஒரு நாள் கடற்கரையோரம் சென்று கொண்டிருந்தேன். ஒரு புதுமையான உருவம் கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஓர் ஆணைப் போலவோ அல்லது பெண்ணைப் போலவோ அந்த உருவம் இல்லை. பறவையினம் போலவும் தெரியவில்லை. விலங்கினமாகவும் தோன்றவில்லை. அந்த உருவத்தை நோக்கி வேகமாக நடந்தேன். அருகில் செல்லச் செல்ல, ஆல மர இலை வடிவத்தில் அது இருந்தது. அதிலேயே கண், காது, மூக்கு, வாய் என்று முகத்துக்குரிய உறுப்புகள் இருந்தன. கொடி போன்ற இரண்டு கால்கள், கொடி போலவே இரண்டு கைகள். திகைத்து நின்றேன்.

அந்த உருவம் தனது கைகளை விரித்துக் கடற்கரை மணலை அள்ளியது. அள்ளிய மணலைக் கடலில் கொண்டு போய்ப் போட்டது. மீண்டும் மீண்டும் அதே காரியத்தை செய்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் நெருக்கமாகச் சென்றேன். அந்த உருவம் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மணலை அள்ளுவதற்காகக் குனிந்தது.

“நீ யார்?” இது என் கேள்வி.

“என்னைத் தெரியவில்லை. நான்தான் இதயம்” என்றது அந்த உருவம்.

“ஓகோ இதயமா? யாருடைய இதயம்? ஆண்பாலா? பெண்பாலா?”

“என் கொடிநிகர் கால், கைகளைப் பார்த்தாலே நான் பெண் இதயம் என்று புரியவில்லையா?”

புரிந்துவிட்டது. ஒரு பெண்ணின் நெஞ்சம், ஏதோ வேதனையின் காரணமாக இப்படி வெளியே வந்திருக்கிறது.

“ஏ பெண் நெஞ்சே! எதற்காக நீ மட்டும் தனியாக வந்திருக்கிறாய்?”

“இது என் தலைவியின் கட்டளை”

“இந்த மணலையெடுத்துக் கடலில் போடச் சொன்னதும் உன் தலைவியின் கட்டளை தானோ?”

”ஆமாம்..”

“ஏன் இந்த வீண் வேலை உனக்கும், உன் தலைவிக்கும்?”

“என் தலைவி என்னைக் கூப்பிட்டு, அடியே! என் நெஞ்சமே! நீ உன் மீது அன்பு இல்லாதவரிடம் உன்னுடைய துன்பத்தையும், அவரைப் பிரிந்திருப்பதன் வேதனையையும் சொல்லிப் பயன் கிடையாது. அதைவிட எளிதான வேலை, மணலை அள்ளிப் போட்டு ஆழ்கடலைத் தூர்ப்பதாகும். எனவே அந்த வேலையைச் செய் என்றாள். அதைத்தான் இப்போது செய்கிறேன்”

பதிலைக் கேட்டதும் என் தலை சுற்றியது. காதலனிடம் தன் வேதனையைச் சொல்லி, அவனைத் தன் மீது அன்புக்கொள்ளச் செய்வதைக் காட்டிலும் கடலைத் தூர்ப்பது எளிதாம்.

விழித்துக் கொண்டேன். கனவு எனப் புரிந்தது. என் நெஞ்சின் மீது கிடந்த திருக்குறள் சுவடியை உற்று நோக்கினேன். அந்தக் குறளை மீண்டும் ஒரு முறை படித்தேன் என்று எழுதியிருக்கிறார் கலைஞர்.

இப்போது அந்தக் குறளை நீங்களும் மீண்டும் படித்துப் பாருங்கள். அர்த்தம் எளிதாகப் புரியும். இதுதான் கலைஞர் படைத்த குறளோவியத்தின் சிறப்பு.